சுருக்கம்

கோயமுத்தூர் மாநகராட்சி – கோயமுத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான உக்கடம் கழிவு நீர் பண்ணையில் உள்ள 15 ஏக்கர் நிலத்தில் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி – வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை

அரசாணை (நிலை) எண்: 135 நாள்: 03.10.2007

படிக்க:

1.ஆணையாளர், கோயமுத்தூர் மாநகராட்சி கடிதம் ந.க.எண்.10619 / 2006 /MH5/ நாள் 8.2.2007.
2.நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.69691/2006/மாந அ3/ நாள் 20.2.2007
3.மேலாண்மை இயக்குநர் (பொ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், கடிதம் ந.க.எண்.நிர்வாக ஆணையர் 2(3) / 5171/2007, நாள் 16.5.2007.
4.நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.69691/மாந.அ4/ 2007, நாள் 01.6.2007.

---

**ஆணை:-**

முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கோயமுத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோவை கோட்டத்தின் மூலம் கோவை மாநகராட்சியுடன் இணைந்து ஜவஹர்லால் நேரு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட, கோவை மாநகராட்சிக்கு சொந்தமான உக்கடம் கழிவு நீர்ப்பண்ணை நிலத்தில் நில அளவை எண்.107 பாகம், 108 பாகம், 109, 110, 111, 112, 113 பாகம், 114 பாகம், 119 பாகம், 120 பாகம் 121, 122, 123 மற்றும் 124 பாகம் – இல் உள்ள 15.0 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு ஒப்படைக்க அரசின் உரிய அனுமதி வழங்குமாறு கோவை மாநகராட்சி ஆணையர் கோரியுள்ளார். மேலும் தற்போது மாநகர மன்றத் தீர்மானம் எண்.263 நாள் 2.2.2007–ல் மேற்படி நிலங்கள் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோக நிலமாக மாற்றம் செய்ய ஒப்புதலளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் சென்னை மற்றும் இதர உள்ளாட்சிகளின் நிலங்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைக்கும் பட்சத்தில், நிலக்கிரயமாக கிரவுண்ட் ஒன்றுக்கு ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம்) அடிப்படையில் நிலத்தை தமிழ்நாடு குடிசைமாற்றுவாரியம் வழங்க வேண்டும் என முந்தைய நிகழ்வுகளில் அரசு ஆணையிட்டுள்ளது என்றும், அதன் படி மேலே குறிப்பிட்ட நிலத்திற்கும் நிலக்கிரயம் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்படி நிலத்தை மேற்படி வாரியத்திடம் ஒப்படைக்கலாம் என்றும், மேற்படி தொகையை மாநகராட்சிக்கு செலுத்துவதாக வாரியம் உறுதி கூறும் பட்சத்தில் வாரியம் அவ்விடத்தில் முன்நுழைவு செய்ய அனுமதி வழங்கலாம் என்றும் கோவை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மேலாண்மை இயக்குநர்(பொ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், அவர்கள் கிரவுண்ட் 1-க்கு ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம்) வீதம் மாநகராட்சிக்கு செலுத்த வாரியக் கூட்டத்தில் வாரிய கூட்ட தீர்மான எண்.6, நாள்; 8.5.2007ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்கண்ட நிலத்தினை வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய உத்தரவு வழங்குமாறு அரசை கோரியுள்ளார். மேலும் மேற்படி நிலத்தில் திட்டப்பணிகள் துவங்க மண்பரிசோதனை, சுற்றுச்சூழல் துறையின் தடையின்மை மற்றும் வரைபட ஒப்புதல் பெறப்படவேண்டியுள்ளதால் மேற்படி இடத்தில் வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்கிடவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் உக்கடம் கழிவு நீர் பண்ணையில் உள்ள 15 ஏக்கர் நிலத்தில் தமிழ் நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முன்நுழைவு செய்ய அனுமதி வழங்கலாம் என தெரிவித்து மேற்படி நிலத்தினை அவ் வாரியத்திற்கு ஒப்படைக்க அரசின் உரிய ஆணையினை வழங்குமாறு அரசை கோரியுள்ளார். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட நிலத்தின் தற்போதைய மதிப்பு ரூ.9,93,16,800/- (ஒன்பது கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து பதினாறாயிரத்து எண்ணூறு) என கோவை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாகவும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து இந்நேர்வில் கீழ்க்கண்டுள்ளவாறு அரசு ஆணையிடுகிறது.

அ) கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான 15 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு தற்போதுள்ள சந்தை மதிப்பின் அடிப்படையில் நில உரிமை மாற்றம் செய்யலாமா அல்லது அரசாணை (நிலை) எண்.35 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 17.2.1997- ல் அறிவித்துள்ள சலுகை அடிப்படையில் மனை ஒன்றுக்கு ரூ.10,000/- பெற்றுக்கொண்டு உரிமை மாற்றம் செய்யலாமா என்பது குறித்து தனியே ஆய்வு செய்து ஆணை வெளியிடப்படும்.

ஆ) இத்திட்டம் உடன் செயல்படுத்த வேண்டிய அவசர நிலையினை கருத்தில் கொண்டு மேலே பத்தி 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள கோவை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள 15 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முதலில் முன் நுழைவு அனுமதி வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது.

6.இவ்வரசாணை வருவாய்த்துறையின் அசா.கு.எண்.24912/எல் டி 5–1/2007/ நாள் 29.6.2007 மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அசா.கு.எண்.20901/ கு ம உ (1)/ 2007–1/ நாள் 23.8.2007 ஆகியவற்றின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

கே.த.ஸபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்:-
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
5, காமராசர் சாலை, சேப்பாக்கம், சென்னை – 5.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
ஆணையர், கோயமுத்தூர் மாநகராட்சி, கோயமுத்தூர்,
மாவட்ட ஆட்சியர், கோயமுத்தூர்.

நகல்:-
ஊரக வளர்ச்சி (மற்றும்) உள்ளாட்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
வீட்டு வசதி (மற்றும்)நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலரின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
வருவாய்த்துறை செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை செயலரின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
இருப்புக் கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 5/10/07